## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 6.5.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதை கொள்கையாகக் கொண்டுள்ள எனது தலைமையிலான அரசு பொது விநியோகத் திட்டத்தை சிறப்புடன் செயல்படுத்தி வருவதோடு மட்டுமல்லாமல், உணவுப் பாதுகாப்பின் அங்கங்களான உற்பத்தி, சேமிப்பு, விற்பனை ஆகியவற்றில் முக்கியப் பங்காற்றி வரும் நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றையும் வலுப்படுத்தி வருகிறது.

வேளாண் உற்பத்தியைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதால், உணவு தானியங்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

உணவு தானியங்களை கொள்முதல் செய்து சேமித்து வைப்பதற்கென கடந்த இரண்டு ஆண்டுகளில் தலா 3,750 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மூன்று கிடங்குகள் கட்டப்பட்டு உள்ளன. இதனையும் சேர்த்து தற்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 6.68 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு வசதி கொண்ட கிடங்குகள் உள்ளன. நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்து வருவதால், இவற்றை சேமித்து வைக்க கூடுதல் சேமிப்புக் கிடங்குகள் அவசியம், என்பதை கருத்தில் கொண்டு, நவீன வசதிகளுடன் கூடிய 4,33,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 47 சேமிப்புக் கிடங்குகள் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் வாயிலாக 1.25 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 15 சேமிப்புக் கிடங்குகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சேமிப்புத் திறன் 6.33 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவிலிருந்து 7.58 லட்சம் மெட்ரிக் டன் என்ற அளவுக்கு உயரும்.

மேலும், கொள்முதல் பொருட்களை பதப்படுத்தி பாதுகாக்கும் வகையில், எருக்கூர் நவீன அரிசி ஆலையில் 25,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு கட்டமைப்புகள், அதாவது Silos 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

விலை விழ்ச்சியின் போது பொருட்களை பாதுகாத்து, பின்னர் விலை ஏற்றத்தின் போது விற்பனை செய்வது விவசாயிகளின் வருவாயை பெருக்க உதவும் என்பதையும், அறுவடைக் காலங்களில் உற்பத்தி அதிகரிப்பால் விலை வீழ்ச்சியும், தேவை அதிகரிக்கும் போது, உற்பத்தி இல்லாததால் விலை ஏற்றமும் ஏற்படுவது தடுக்கப்படும் என்பதையும் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் 2,270 ஊரகக் கிடங்குகள் கட்டப்பட்டன. இதன் காரணமாக, கூட்டுறவு சங்கங்களில்

சேமிப்பு கிடங்குகளின் சேமிப்புத் திறன் 11 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. நடப்பாண்டில், 140 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேலும் 1044 சேமிப்பு கிடங்குகள் கட்டப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தானிய சேமிப்புக் கிடங்குகளின் சேமிப்புத் திறன் 12 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும்.

உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 33,519 நியாயவிலைக் கடைகள் மூலம் அரிசி விலை ஏதுமின்றியும், சர்க்கரை, பாமாயில், மண்ணெண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை மானிய விலையிலும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய உணவுக் கழகம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமான கிடங்குகளில் இருந்து நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் எடுத்துச் செல்லப்படுவதை கண்காணிக்க கணினி மயம் ஆக்கல் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, 50 கோடி ரூபாய் மதிப்பில் கணினி மயம் ஆக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனைச் செயல்படுத்த மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழுவும், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் அவர்கள் தலைமையில் திட்டச் செயலாக்கத்திற்காக மற்றொரு குழுவும் அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் 4530 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் விவசாய உறுப்பினர்களுக்கு தேவையான பயிர்க் கடன் உதவி வழங்குவதுடன், விவசாய உற்பத்தியை உயர்த்த உரங்கள், விதைகள், பூச்சிகொல்லி மருந்துகள் போன்ற இடுபொருட்களையும் விநியோகம் செய்து வருகின்றன.

விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்றக் கூடிய இந்தச் சங்கங்களில் 606 சங்கங்கள் நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற போது மிகவும் நலிவுற்று செயலற்ற நிலையில் இருந்தன. எனது அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் 467 சங்கங்களின் செயல் திறன் தற்போது மேம்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், வேளாண்மை கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியினைக் கூட பெறத் தகுதியில்லாத 41 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் குறுகிய காலக் கடனமைப்பு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபாய் வீதம் 20 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இந்தச் சங்கங்கள் தற்போது நல்ல முறையில் செயலாற்றி வருகின்றன. மேலும், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களை கணினி மயம் ஆக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, ரொக்கம் மற்றும் நகைகளை பாதுகாக்கும் வகையில், பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்ட தலா 5 லட்சம் ரூபாய் வீதம், 50 சங்கங்களுக்கு 2 கோடியே 50 லட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது. இது போன்ற பாதுகாப்பு சாதனங்களை மேலும் 52 சங்கங்களில் நிறுவும் வகையில், ஒரு சங்கத்திற்கு 1 லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் வீதம் 52 சங்கங்களுக்கு 69 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில் அளிக்கும் வகையில், 1,236 வேளாண் சேவை மையங்கள் அமைக்கப்பட்டன. அவை வேளாண்

இயந்திரங்களை கொள்முதல் செய்ய 25 கோடியே 60 லட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

தற்போது நலிவுற்ற நிலையில் இருக்கும் 139 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், முதற்கட்டமாக 72 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களின் வணிகத்தை 1 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தும் வகையிலும், அவைகளை செயல் திறன் மிக்க சங்கங்களாக மாற்றும் வகையிலும், சங்கம் ஒன்றிற்கு 50 லட்சம் ரூபாய் வீதம் 36 கோடி ரூபாய் சிறப்பு காசுக் கடன் உதவி அதாவது Cash Credit Facility வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகள் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்த வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******